ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்
**திகதி** 2018.11.16

## இலங்கைச் சுபீட்சச் சுட்டெண் - 2017

### தேசிய சுபீட்சம்

2017இல் இலங்கை சுபீட்சச் சுட்டெண் 2016இல் பதிவுசெய்யப்பட்ட 0.661 இலிருந்து 0.771 இற்கு அதிகரித்தமைக்கு "பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல்" மற்றும் "சமூக பொருளாதார உட்கட்டமைப்பு" ஆகிய துணைச் சுட்டெண்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களே முக்கிய காரணங்களாகும். பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் மேம்பட்டமைக்கு தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பும் தொழில் வாய்ப்புடன் இணைந்து காணப்பட்ட அம்சங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் காரணங்களாக அமைந்தன. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணினைப் பொறுத்தவரையில் விரைவுப் பாதையின் விரிவாக்கத்தின் காரணமாக வீதிவலையமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், பாலங்கள் மற்றும் மேம்பாலச் செயற்றிட்டங்களின் கட்டுமானம், மின்னூட்டல் வசதிகளின் கிடைப்பனவு மற்றும் குழாய்வழி நீரின் தரத்தில் ஏற்பட்ட மேம்பாடுகள் என்பன முக்கிய தூண்டுதல்களாக அமைந்தன. சூழலின் தூய்மை மற்றும் காற்றின் தரம் என்பனவற்றின் மட்டம் குறைவடைந்தமையின் காரணமாக 2017ஆம் ஆண்டுப்பகுதியில் மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்த போதும் நலக் கவனிப்பு வசதிகளின் கிடைப்பனவு, தரமான கல்வியின் கிடைப்பனவு, மக்களின் செல்வம் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் அவர்களின் ஈடுபாடு போன்ற அம்சங்களில் முன்னேற்றங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

**இலங்கை சுபீட்சச் சுட்டெண்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணானது நாட்டின் சுபீட்சத்தினை அளவிடுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்ற ஒரு கலப்புக் குறிகாட்டியாகும். இச்சுட்டெண் மூன்று துணைச் சுட்டெண்களான பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

**அட்டவணை 1: இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்கள் 2016 - 2017**

| | 2016 | 2017 |
|---|---|---|
| இலங்கை சுபீட்சச் சுட்டெண் | **0.661** | **0.771** |
| பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் | 0.742 | 0.931 |
| மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் | 0.841 | 0.759 |
| சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் | 0.399 | 0.624 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1 - இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் அசைவுகள் 2013 – 2017**




மூலம்: இ.ம.வங்கி

## மாகாண ரீதியான சுபீட்சம்

மாகாணங்கள் முழுவதிலுமுள்ள சுபீட்சத்தின் மட்டத்தினை அளவிடுவதற்காக தொகுக்கப்பட்ட மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள் வடமேல், சப்பிரகமுவா, தென் மற்றும் மேல் மாகாணங்களில் அதிகரித்துள்ளன. அதேவேளை, தரமிடல் வரிசைகளில் முன்னேற்றங்களை வடமேல் மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் அவதானிக்க முடிந்தது. மாகாண ரீதியான சுபீட்சச் செயலாற்றங்கள் அட்டவணை 2இல் தரப்பட்டுள்ளன.

**வரைபடம் 2 – மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்: 2016 – 2017**




**மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்கள்**

**வரைபடம் 3 – பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்: 2016 – 2017**




**வரைபடம் 4 – மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்: 2016 – 2017**




**வரைபடம் 5 – சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்: 2016 – 2017**




**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

## பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்

பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் மத்தி, சப்பிரகமுவா, தென், ஊவா மற்றும் மேல் ஆகிய ஐந்து மாகாணங்களில் மேம்பட்டிருக்கின்றமைக்கு தலைக்குரிய மொ.உ.உற்பத்தி, உயர்ந்த தொழில் வாய்ப்பு வீதம் மற்றும் முறைசாரா துறை கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.

அதேவேளை, உயர்ந்த மாகாண ரீதியான பணவீக்க விகிதங்கள், தொழிலின்மை மட்டங்களில் ஏற்பட்ட சிறிதளவான அதிகரிப்புக்கள், கைத்தொழில் மற்றும் வங்கித்தொழில் அடர்த்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களின் குறைந்த செயலாற்றத்திற்கான முக்கிய தூண்டுக் காரணிகளாக அவதானிக்கப்பட்டிருக்கின்றன.

## மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்

மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் தென் மாகாணத்தில் மட்டும் மேம்பட்டிருக்கின்ற வேளையில் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. தென் மாகாணத்தின் மேம்பாட்டிற்கு உயர்தரக் கல்வியின் கிடைப்பனவு அதேபோன்று மக்களின் சுகாதார அளவுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் ஆகிய அம்சங்களில் காணப்பட்ட உயர்ந்த செயலாற்றம் முனைப்பான காரணிகளாக அமைந்தவிடத்து ஊர்திகளின் சொத்துரிமை மற்றும் சிறப்பு அங்காடிகளை அணுகக்கூடிய தன்மை என்பன அதிகரித்துக் காணப்பட்டன.

எஞ்சிய ஏனைய மாகாணங்களில் இத்துணைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தமைக்கு நலக்கவனிப்பு வசதிகளின் கிடைப்பனவு, கல்வியின் கிடைப்பனவு மற்றும் அதன் தரம், மக்களின் செல்வம் மற்றும் பொழுதுபோக்கில் அவர்களின் ஈடுபாடு ஆகிய அம்சங்களில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதும் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் நிலவிய டெங்கு தொற்றுநோயின் காரணமாக சூழலின் தூய்மையில் ஏற்பட்ட மோசமான தாக்கமும் காற்றின் தரத்தில் பதிவுசெய்யப்பட்ட குறைந்த தரமும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

## சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்

சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் அதிகரிப்பினைப் பதிவுசெய்திருக்கின்றமைக்கு மத்திய விரைவுப்பாதைச் செயற்றிட்டத்தின் நிருமாணத்தின் காரணமாக வீதி அபிவிருத்தியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், ராஜகிரிய, கணேமுல்ல மற்றும் பொல்காவலை மேம்பாலங்களின் முன்னேற்றம் மற்றும் மின்வலு மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வசதிகளின் கிடைப்பனவு என்பன முக்கிய

காரணங்களாக அமைந்தன. மேலும், 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை நியதிகளில் அளவிடப்பட்டவாறு சட்டம் மற்றும் ஒழுங்கு அம்சங்களிலும் சாதகமான அபிவிருத்திகள் அவதானிக்கப்பட்டிருக்கின்றன.

ஏனைய ஏழு மாகாணங்களினதும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் மோசமடைந்தமைக்கு தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தின் கிடைப்பனவு, தொலைத்தொடர்பூட்டல் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவுக்குக் காரணங்களாக அமைந்தன.

**அட்டவணை 2 – மாகாண சுபீட்சச் சுட்டெண் மற்றும் மாகாணத் தரங்களுடன் அவற்றின் துணைச் சுட்டெண்கள்**

| சுட்டெண் மற்றும் மாகாணம் | சுட்டெண் பெறுமதி | | மாகாணத் தரம் | |
|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2016 | 2017 |
| **மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.352 | 0.346 | 3 | 4 |
| கிழக்கு | 0.143 | 0.072 | 8 | 9 |
| வட மத்திய | 0.283 | 0.199 | 5 | 5 |
| வட மேல் | 0.312 | 0.347 | 4 | 3 |
| வடக்கு | 0.267 | 0.189 | 6 | 6 |
| சப்பிரகமுவா | 0.132 | 0.152 | 9 | 7 |
| தென் | 0.408 | 0.489 | 2 | 2 |
| ஊவா | 0.215 | 0.141 | 7 | 8 |
| மேல் | 1.203 | 1.279 | 1 | 1 |
| **பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.361 | 0.447 | 4 | 4 |
| கிழக்கு | 0.242 | 0.104 | 8 | 8 |
| வட மத்திய | 0.454 | 0.315 | 2 | 7 |
| வட மேல் | 0.428 | 0.387 | 3 | 5 |
| வடக்கு | 0.258 | 0.104 | 7 | 9 |
| சப்பிரகமுவா | 0.171 | 0.348 | 9 | 6 |
| தென் | 0.304 | 0.527 | 5 | 2 |
| ஊவா | 0.300 | 0.469 | 6 | 3 |
| மேல் | 1.520 | 1.659 | 1 | 1 |
| **மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்** [1] | | | | |
| மத்திய | 0.228 | 0.164 | 7 | 7 |
| கிழக்கு | 0.051 | -0.001 | 9 | 9 |
| வட மத்திய | 0.348 | 0.332 | 5 | 5 |
| வட மேல் | 0.397 | 0.344 | 4 | 4 |
| வடக்கு | 0.424 | 0.376 | 3 | 3 |
| சப்பிரகமுவா | 0.338 | 0.273 | 6 | 6 |
| தென் | 0.714 | 0.745 | 2 | 2 |
| ஊவா | 0.127 | 0.094 | 8 | 8 |
| மேல் | 1.175 | 1.042 | 1 | 1 |
| **சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.466 | 0.427 | 2 | 2 |
| கிழக்கு | 0.136 | 0.112 | 5 | 5 |
| வட மத்திய | 0.047 | -0.049 | 8 | 7 |
| வட மேல் | 0.111 | 0.309 | 7 | 3 |
| வடக்கு | 0.119 | 0.088 | 6 | 6 |
| சப்பிரகமுவா | -0.112 | -0.167 | 9 | 9 |
| தென் | 0.207 | 0.195 | 4 | 4 |
| ஊவா | 0.218 | -0.139 | 3 | 8 |
| மேல் | 0.913 | 1.136 | 1 | 1 |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

### தொழில்நுட்பக் குறிப்பு:

**சுட்டெண்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண் 43 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டிருப்பதுடன் மூன்று துணைச் சுட்டெண்களாக வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் சமமான நிறையினைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு மாறியும் அதற்குரிய துணைச் சுட்டெண்களுக்குள் சமமான நிறையைக் கொண்டிருக்கும்.

பொருளாதார வியாபார சூழல் துணைச் சுட்டெண் வாழ்க்கைத்தரம், தொழில்நிலை, வருமானம், வறுமை, விலை உறுதிப்பாடு, துறைவாரியான தொழில்நிலை, கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி ஆகிய வகைகளாக்கப்பட்ட 9 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகிறது. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் நலக் கவனிப்பு வசதிகளின் கிடைப்பனவு, கல்வி வசதிகளின் கிடைப்பனவு, கிடைக்கத்தக்க கல்வி வசதிகளின் தரம், செல்வம், பொழுதுபோக்கு வசதிகளின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு, காற்றின் தரம் மற்றும் சூழலின் சுத்தமான தன்மை என்பன தொடர்பான 22 மாறிகளை உள்ளடக்கித் தொகுக்கப்படுகிறது. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 12 மாறிகளை உள்ளடக்கி இருப்பதுடன் அவை தொடர்பான அம்சங்களாக மின்வலுவின் கிடைப்பனவு, தொடர்பூட்டல் வசதிகளின் கிடைப்பனவு, வீதி உள்ளடக்கத்தின் கிடைப்பனவு, குற்றச்செயலற்ற சூழல், போக்குவரத்து வசதிகளின் கிடைப்பனவு, சுத்தமான குடிநீர் வசதிகளின் கிடைப்பனவு, தரமான குழாய்வழி நீர், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகளின் கிடைப்பனவு, சுகாதாரக் கிடைப்பனவு குடியியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு என்பன காணப்படுகின்றன.

**முறையியல்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுப்பதில் பயன்படுத்தப்பட்ட மாறிகள் அளவீட்டின் பல்வேறுபட்ட அலகுகளின் வடிவில் காணப்படுகின்றன. ஆகவே, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தரவுகளை தரப்படுவதன் மூலம் பொதுவான அளவு ஒன்றிற்கு இவ்வனைத்து மாறிகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. நாடு மற்றும் மாகாணங்களுக்கான சுட்டெண் பெறுமதிகள் தனித்தனியாக தொகுக்கப்படுவதனால் மாகாண ரீதியான சுட்டெண்களை நாட்டின் மட்டத்தில் அமைந்த சுட்டெண்களுடன் ஒப்பிட முடியாது. எனவே, மாகாண ரீதியான மட்டத்திலமைந்த சுட்டெண்களை மாகாணங்களுக்கிடையே ஒப்பிட முடியுமென்பதுடன் நேரம் மற்றும் நாட்டு மட்டத்திலான சுட்டெண்களை நேர அளவில் மட்டுமே ஒப்பிட முடியும்.

[1] சுட்டெண் பெறுமதிகள் கடந்த பத்து ஆண்டுகள் தொடர்பில் ஒவ்வொன்றாக அனைத்து மாறிகளையும் தரப்படுத்துவதன் மூலம் தொகுக்கப்படுகின்றன. ஆகவே, சுட்டெண் பெறுமதி ஒன்றின் அடையாளம் தொடர்பான சராசரியுடன் ஒப்பிடுகையில் நேர்க்கணிய அல்லது எதிர்க்கணியப் பிறழ்வுகளைச் சுட்டுவதாகவுள்ளது. எனவே, சுட்டெண்ணில் காணப்படும் எதிர்க்கணிப் பெறுமதிகள் சுபீட்ச மட்டங்கள் எதிர்மறையாகக் காணப்படுகின்றன என்பதனை சுட்டுவதாக இருக்காது.